# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1956 - 2016 පෙබරවාරි මස 26 වැනි සිකුරාදා - 2016.02.26

*1956 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 722 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 723 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 728 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மாச்சு மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## திக்குவெல்லை பிரதேச சபை

திக்குவெல்லை பிரதேச சபையில் கீழ்வரும் பதவி வெற்றிடத்திற்காக, தென் மாகாண சபையில் நிரந்தர வதிவிடம் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரிகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து செயலாளர், பிரதேச சபை, திக்குவெல்லை என்ற முகவரிக்கு 2016.03.10 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | கனரக வாகன இயக்குநர் | 01 | PL 3 2006A ரூ. 12,470 -10×130- 10×145- 10× 160-12×170 - ரூ. 18,860 | க. பொ. த. (ச/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஏதேனும் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். |

3. **வேறு தகைமைகள்** .- தொழிற் திறமை மற்றும் தொழிற் கல்விச்சேவை ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய தொழிற்திறமை (N.V.Q.) குறைந்தபட்சம் நான்காம் மட்டத்தில் திறமைச் சித்திபெற்றிருப்பதுடன் மோட்டார் வாகனத் திணைக்களப் பணிப்பாளரினால் விநியோகிக்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்று குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

4. **வயது**.- விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு விண்ணப்பதாரி 18 வயதிற்கு கீழ்ப் படாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **ஏனையவை**.- விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு 5 வருட காலத்தினுள் தென் மாகாண ஆளுகைப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக 3 வருட கால வதிவை உறுதி செய்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின் நேர்முகப் பரீட்சை மற்றும் தொழிற் தகைமை உறுதிப்படுத்தல் பரீட்சை, பெறுபேறுகளின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

### திக்குவெல்லை பிரதேச சபையில் கன ரக வாகன இயக்குநர் பதவி

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் :----.
2. முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
4. நிரந்தர வதிவிடம் :----.
5. தபால் முகவரி :----.
6. தேசிய இனம் :----.
7. நிரந்தர வதிவிட முகவரி :----.
8. நிரந்தர வதிவிட பிரதேச செயலாளர் பிரிவு :----.
9. நிரந்தர வதிவிடம் இருக்கும் உள்ளூராட்சிப் பிரிவு :----.
10. பிறந்த திகதி :----.
11. 2015.12.31 ஆந் திகதியன்று வயது :----.
12. கல்வித் தகைமைகள் :----.
13. அனுபவம் :----.

14. தொழிற் தகைமைகள் :----.

15. வேறு தகைமைகள் :----.

16. நீங்கள் ஏதேனும் குற்றச் செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :----.

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரை சரியானவை எனத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என்னுடைய இவ் உறுதி மொழியானது பொய்யானது என நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நியமனம் பெறுவதற்கு முன்னர் அபேட்சக தன்மை ரத்து செய்யப்படுமெனவும் அல்லது நியமனம் பெற்ற பின்னர் பதவி நீக்கம் செய்யப்படுமெனவும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

2-706

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### அளவ்வ பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் (நிலையான துணை விதி) சட்டம்

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் (நிலையான துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி அளவ்வ பிரதேச சபையின் செயலாளர் பி. ஏ. பி. மல்லிகா ஆகிய நான், வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்தல் பற்றிய துணை விதி, அளவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று 2016.02.10 ஆந் திகதி 13 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

பி. ஏ. பி. மல்லிகா,
செயலாளர் மற்றும் செயல்கள்,
கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,
அளவ்வ பிரதேச சபை.

**தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநிலைச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (இடைநிலைச் சட்டம்) சட்டத்தில் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தில் மாகாண சபையில் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி வடமேல் மாகாணத்தில் மாகாண சபையில் உள்ளூராட்சி மன்ற விடயப்பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்டு 2003.11.28 ஆந் திகதிய மற்றும் 1317 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும் உரிய வர்த்தமானி அறிவித்தலுக்கு திருத்தமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் 2014.10.01 ஆந் திகதி மற்றும் 1882/22 ஆம் இலக்கத்தினால் அறிவித்தலுக்குற்படுத்தப்பட்டதும் வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வது பற்றிய துணை விதியினை மற்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலுக்கு திருத்தமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் 2015.01.20 ஆந் திகதி மற்றும் 1898/28 ஆம் இலக்க பிரசுரிக்கப்பட்டதுமான, வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்தல் பற்றிய துணைவிதிக்கு உரிய திருத்தம் மற்றும் 2014.10.01 ஆந் திகதிய இலக்கம் 1882/22 அம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.08.28 ஆந் திகதி மற்றும் 1929/45 ஆம் இலக்கத்தினால் பிரசரிக்கப்பட்டதுமான வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்தல் பற்றிய துணை விதிக்குரிய திருத்தம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை துணை விதியின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைய அளவ்வ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின்படி நான் தீர்மானிக்கின்றேன்.

2-736

## அரநாயக்க பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 14 மற்றும் 24 (2) ஆம் உறுப்புரையின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பிரதேச சபையால் இங்கு தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குரிய பாதைகள்/வீதிகள் எனப் பிரகடனப்படுத்தி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*தற்போது பிரதேச சபையினால் அளந்து அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள் /வீதிகள் பற்றி குறித்த காணி உரிமையாளராக உரிமைபாராட்டுவோரால் ஏதாவது எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 24 (2) ஆவது பிரிவின் பிரகாரம் செயற்படுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*இக்கால எல்லைக்குள் யாதேனுமொரு எதிர்ப்பு முன்வைக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள்/வீதிகளாக ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கப்படும் எனவும், பொதுமக்கள் அறிந்துகொள்வதற்காக இத்துடன் பகிரங்க அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*டீ. எம். சந்ராவதி,*
*செயலாளர்,*
*அரநாயக்க பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*அரநாயக்க,*
*2016, பெப்புருவரி 5.*

### அட்டவணை

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | ஹபலக்காவை பதுவத்தை பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | ஹபலக்காவையிலிருந்து தல்கஸ்பிட்டிய வரையான பாதையிலிருந்து கூரகலை சந்தி வரையிலான பாதை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | 44 A ஹபலக்காவை பிரிவு |
| பாதையின் நீளம் | : | 182 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :*

| | |
|---|---|
| 1. திருமதி ஏ. ஜீ. திலகாவதி | கெபலேகெதரவத்தை காணி |
| 2. திரு. ஏ. டி. பிரேமரத்ன | கெபலேகெதரவத்தை காணி |
| 3. திரு. ஏ. டி. குணரத்ன | கெபலேகெதரவத்தை காணி |
| 4. திரு. ஏ. டி. சய்மன் | பதுவத்தை காணி |
| 5. திரு. ஏ. டி. அஜித் ரொபட் | பதுவத்தை காணி |

*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :*

| | |
|---|---|
| 1. திரு. ஏ. டி. ஜீ. பியல் குமாரசிறி | கெபலேகெதரவத்தை காணி |
| 2. திரு. ஏ. டி. பிரேமரத்ன | கெபலேகெதரவத்தை காணி |
| 3. திரு. ஏ. டி. குணரத்ன | கெபலேகெதரவத்தை காணி |
| 4. திரு. ஏ. டி. அஜித் ரொபட் | பதுவத்தை காணி |

*உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.10.22 ஆந் திகதிய 320/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத் திட்டத்தின் பிரகாரமாகும்.*

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கல்அதர அஸ்மடலை ரணபாஹுகே வத்தையிலிருந்து ஐ. டபிள்யூ. விமலசேன அவர்களின் வீடு வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | கல்அதர அஸ்மடல ரணபாஹுகே வத்தையிலிருந்து ஐ. டபிள்யூ. விமலசேன அவர்களின் வீடு வரையான பாதை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | 16 D அஸ்மடலை |
| பாதையின் நீளம் | : | 154 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஐ. ஏ. சலேலு | ரணபஹுகேவத்தை காணி |
| 2. திரு. எல். பீ. சரத் சந்திர | ஹிட்டினாவத்தை காணி |
| 3. திரு. எஸ். டபிள்யூ. ஜீ. ஆரியதாஸ | கெதரகாவதெனிக காணி |
| 4. திரு. ஐ. டபிள்யூ. சாந்த சூரியகுமார | ஹிட்டினாவத்தை காணி |
| 5. திரு. டீ. வி. நிஹால் சந்திரசிறி | ஹிட்டினாவத்தை காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஐ. ஏ. சலேலு | ரணபஹுகேவத்தை காணி |
| 2. திரு. எல். பீ. சரத் சந்திர | ஹிட்டினாவத்தை காணி |
| 3. திரு. எஸ். டபிள்யூ. ஜீ. ஆரியதாஸ | கெதரகாவதெனிக காணி |
| 4. திரு. ஐ. டபிள்யூ. டீ. வி. அசோக | ஹிட்டினாவத்தை காணி |
| 5. திரு. ஐ. டபிள்யூ. விமலசேன | ஹிட்டினாவத்தை காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.11.22 ஆந் திகதிய 352/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத்திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | காரியகம கொண்டகன்தெனிய பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | காரியகம கொலொம்பியாவத்தை காணியில் இருந்து கொண்டகன்தெனிய காணி வரையிலான பாதை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | 17ஏ காரியகம |
| பாதையின் நீளம் | : | 376 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. வண. எம். பஞ்ஞானந்த தேரர் | கொலம்பியாவத்தை காணி |
| 2. திருமதி டபிள்யூ. ஆர். தீபா ஜயந்தி மெனிகே | கொலம்பியாவத்தை காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. வண. எம். பஞ்ஞானந்த தேரர் | கொலம்பியாவத்தை காணி |
| 2. திருமதி டபிள்யூ. ஆர். தீபா ஜயந்தி மெனிகே | கொலம்பியாவத்தை காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.10.17 ஆந் திகதியும் 319/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத்திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | காரியகமை வலவ்வத்தை ஒழுங்கை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | காரியகம அரநாயக்க பிரதான வீதியில் பிரியும் வலவ்வத்தை ஒழுங்கை தங்கஹமுலஹேன காணியிலிருந்து ஆரம்பித்து அரம்பேஹேன காணியில் முடிவடையும் பாதை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | 17ஏ காரியகம |
| பாதையின் நீளம் | : | 140 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. பீ. ஜீ. சரத் பிரியந்த | தங்கஹமுலஹேன காணி |
| 2. திருமதி ஏ. ஜீ. நாலனி குலசிங்ஹ | தங்கஹமுலஹேன காணி |
| 3. திரு. கே. ஜீ. வசந்த பண்டார | தங்கஹமுலஹேன காணி |
| 4. திருமதி ஜீ. டபிள்யூ. நில்மினி சாந்தனி | ஹப்புகஹமுலஹேன காணி |
| 5. திருமதி எம். ஏ. ஐ. ரூபகுமாரி | ஹப்புகஹமுலஹேன காணி |
| 6. திரு. டி. தயாரத்ன | ஹப்புகஹமுலஹேன காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி டி. அநுலாவதி | வலவ்வத்தை காணி |
| 2. திரு. எச். ஜேமிஸ் | வலவ்வத்தை காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.11.25 ஆந் திகதியும் 356/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத்திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | அட்டாம்பிட்டிய வெலிஹேன விகாரைப் பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | அலுபதையிலிருந்து தல்கமை பாதையில் அட்டப்பிட்டிய நெற் களத்திலிருந்து வெலிஹேன விகாரை வரையான பாதை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | 33ஏ அட்டாப்பிட்டிய |
| பாதையின் நீளம் | : | 230 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஏ. எம். புஞ்சி பண்டா | வாகொல்லவத்தை காணி |
| 2. திரு. ஏ. எம். புஞ்சி பண்டா | அம்பகும்புர காணி |
| 3. திரு. திலக் எஸ். கருணாதில | அம்பகும்புர காணி |
| 4. திரு. எஸ். ஜீ. எல். விஜேரத்ன பண்டா | உடதெனியவத்தை காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஏ. எம். புஞ்சி பண்டா | அம்பகும்புர காணி |
| 2. திரு. எம். குடாபண்டா | எகொடவாகொல்லவத்தை காணி |
| 3. திரு. எல். வீ. ஆர். பொடிபண்டா | வெலிஹேன காணி |
| 4. திரு. ஜீ. ஆர். குணவர்தன பண்டா | வெலிஹேன காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.11.25 ஆந் திகதியும் 354/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத்திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | அறநாயக்க மாவனல்லை பாதையிலிருந்து யு. டபிள்யூ. சந்திராவதி அவர்களின் வீடு வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | அறநாயக்க மாவனல்லை பாதையிலிருந்து யு. டபிள்யூ. சந்திராவதி அவர்களின் வீடு வரையான பாதை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | 43 அறநாயக்க |
| பாதையின் நீளம் | : | 129 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஏ. எஸ். மாரசிங்ஹ | பன்சலேவத்தை ஜம்புகஹவத்தை காணி |
| 2. திரு. யு. டபிள்யூ. பியதுங்க | பன்சலேவத்தை ஜம்புகஹவத்தை காணி |
| 3. திரு. யு. டபிள்யூ. பிரேமசந்திர குணதாஸ | கெதரகாவவத்தை காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. பி. ஜி. ஆரியரத்ன | தெவட்டகஹமுல காணி |
| 2. திரு. ஜீ. பி. காமினி உபசேகர | தெவட்டகஹமுல காணி |
| 3. திரு. யு. டபிள்யு. சந்திராவதி | கெதரகாவவத்தை காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.11.25 ஆந் திகதிய 357/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத்திட்டத்தின் பிரகாரமாகும்.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | அஸ்மடலை கல்கொடஹேனயிலிருந்து ஹப்புகொல்லஹேன வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | அஸ்மடலை கல்கொடஹேனை காணியிலிருந்து ஹப்புகொல்லஹேன காணி வரையான பாதை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | 16டீ அஸ்மடலை |
| பாதையின் நீளம் | : | 253 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. கே. ரணசிங்ஹ | கல்கொடஹேனை காணி |
| 2. திரு. ஈ. ஏ. சரத் ஏக்கநாயக்க | மெலேபெந்திதென்ன காணி |
| 3. திரு. கே. பீ. கபில | கல்லெனமுலஹேனை காணி |
| 4. திரு. லலித் கந்தபஹல | கல்லெனமுலஹேனை காணி |
| 5. திருமதி பீ. ஆர். ஹிங்மெனிகே | ஹப்புகொல்லஹேனை காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. கே. ரணசிங்ஹ | கல்கொடஹேனை காணி |
| 2. திருமதி ஐ. ஆர். ஏ. பிசோமெனிகே | மெலேபெந்திதென்ன காணி |
| 3. திருமதி ஐ. ஆர். இந்திரானி ரணபாஹு | மெலேபெந்திதென்ன காணி |
| 4. திரு. ஈ. ஏ. சரத் ஏக்கநாயக்க | மெலேபெந்திதென்ன காணி |
| 5. திரு. ஈ. ஏ. சரத் ஏக்கநாயக்க | கல்லெனமுலஹேனை காணி |
| 6. திரு. பீ. ஆர். பொடிபண்டா | ஹப்புகொல்லஹேனை காணி |

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2015.11.22 ஆந் திகதிய 351/2015 ஆம் இலக்கத்தைக் கொண்ட படவரைபுத்திட்டத்தின் பிரகாரமாகும்.

2-738

---

## பொல்கஹவெல பிரதேச சபை

பறிமுதல்செய்யப்பட்ட சொத்துக்கள் பகிரங்க ஏல விற்பனை செய்தல்

பொல்கஹவெல பிரதேச சபைக்கு உட்பட்ட வீரம்புகெதர உப அலுவலக மதிப்பீட்டு எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வரி செலுத்தாமை காரணமாக பறிமுதல்செய்யப்பட்ட, கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் பொருட்கள் 2016.02.29 ஆந் திகதி வீரம்புகெதர பிரதேச சபை உப அலுவலகக் காணியில் மு. ப. 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

1. மூன்று ஆசனங்களைக் கொண்ட கதிரை (செட்) 1

செயலாளர்,
பொல்கஹவெல பிரதேச சபை.

2-800

# நானாவித அறிவித்தல்கள்

## ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச சபை

விளம்பர அறிவித்தல்களுக்கான கட்டணம் – 2016

மண்முனைப்பற்று பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய மண்முனைப் பற்று பிரதேச சபை செயலாளரின் தீர்மான இலக்கம் 143 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,
செயலாளர்,
மண்முனைப்பற்று பிரதேச சபை,
ஆரையம்பதி.

மண்முனைப்பற்று பிரதேச சபை அலுவலகம்,
ஆரையம்பதி,
2016, சனவரி 25.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 22(அ), 122 முதல் 126 வரையுள்ள பிரிவுகளின் கீழ் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், அச்சட்டத்திற்கமைய ஏற்படுத்தப்பட்ட துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய எவரேனும் ஒருவர் வீதியில், ஒரு பாதையில், ஒரு நீரோடையில், ஒரு வேலியில், கடலில், வானில் தென்படும் வண்ணம், பொது இடத்தில், தனியார் காணியில் காட்சிப்படுத்தச் செய்யும் அறிவித்தல் அல்லது வர்த்தக விளம்பரங்களுக்கெனப் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கட்டணமொன்றையும் அதன் (10%) பத்து வீதப் பெறுமதியான வைப்புக் கட்டணத்தையும் செலுத்தி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டுமெனவும் மண்முனைபற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

| | காலம் | ஒரு சதுர அடிக்கான கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| பதாதை ஒன்றுக்கு | 6 மாதங்களுக்கு | 25 0 |
| | ஒரு வருடத்துக்கு | 50 0 |
| நிரந்தர அறிவித்தல் பலகைக்கு | 6 மாதங்களுக்கு | 45 0 |
| | ஒரு வருடத்துக்கு | 50 0 |
| மின்னொளிரும் பலகைக்கு | 6 மாதங்களுக்கு | 50 0 |
| | ஒரு வருடத்துக்கு | 100 0 |

2-640

---

## ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச சபை

கட்டாக்காலி மந்தைகளை பிடித்து வைத்தல் – 2016

மண்முனைப்பற்று பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய மண்முனைப் பற்று பிரதேச சபை செயலாளரின் தீர்மான இலக்கம் 144 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,
செயலாளர்,
மண்முனைப்பற்று பிரதேச சபை,
ஆரையம்பதி.

மண்முனைப்பற்று பிரதேச சபை அலுவலகம்,
ஆரையம்பதி,
2016, சனவரி 25.

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 66 (1.2.3) ஆவது பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மண்முனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கட்டாக்காலியாக திரியும் கால்நடைகளை பிடித்து வைத்து அதற்கான கீழ் அட்டவணை I, II இல் காட்டப்படும் கட்டணங்களை அறவிடுவது எனவும் மண்முனைபற்று பிரதேச சபை தீரமானிக்கின்றது.*

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு மாட்டினை பிடிப்பதற்கு தொழிலாளர் கூலி | 1,000 0 |
| பிடித்த ஒரு மாட்டினை ஏற்றிச் செல்வதற்கான கூலி | 2,500 0 |
| ஒரு மாட்டிற்கு ஒரு நாளுக்கு பராமரிப்புச் செலவு | 250 0 |
| ஒரு மாட்டிற்கான தண்டம் | 1,500 0 |
| ஒரு ஆட்டினை பிடிப்பதற்கு தொழிலாளர் கூலி | 150 0 |
| பிடித்த ஒரு மாட்டினை ஏற்றிச் செல்வதற்கான கூலி | 250 0 |
| ஒரு மாட்டிற்கு ஒரு நாளுக்கு பராமரிப்புச் செலவு | 200 0 |
| ஒரு மாட்டிற்கான தண்டம் | 400 0 |

*2-641/1*

---

**ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச சபை**

*ஆதனவரி விதிப்பனவு - 2016*

*மண்முனைப்பற்று பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய மண்முனைப்பற்று பிரதேச சபை செயலாளரின் தீர்மான இலக்கம் 153 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2016 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்ட அவ்வரிப்பணம் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய தினங்களில் முடிவுறும் ஒவ்வொரு தவணைக்குள் சமமான நான்கு தவணைப்பண அடிப்படையில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.*

*2016 ஆம் ஆண்டிற்கான முழுமையான வரிப்பணம் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் மண்முனைபற்று பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தப்பட்டால் அந்த முழுமையான வரிப்பணத்தொகையினை நூற்றுக்கு (10%) கழிவும் ஒவ்வொரு தவணைக்குரிய வரிப்பணம் அந்த ஒவ்வொரு தவணையின் முதல் மாத இறுதி தினத்திற்கு முன்னர் மண்முனைப்பற்று பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தப்பட்டால் நூற்றுக்கு (5%) கழிவும் வழங்கப்படும்.*

(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,
செயலாளர்,
மண்முனைபற்று பிரதேச சபை.

மண்முனைபற்று பிரதேச சபை அலுவலகம்,
ஆரையம்பதி,
*2016, சனவரி 25.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம் மண்முனைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லையில் கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வரையறைக்குள் அமைந்திருக்கும் சகல ஆதனங்களின் 2014 ஆம் ஆண்டின் தற்காலிக பெறுமதி 2015 ஆம் ஆண்டிற்கு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும்,*

அப்பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டிக்கும் அதிகாரங்களின் பிரகாரம் ஆண்டு பெறுமதி கணிக்கப்பட்டு விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் அறவீட்டு பெறுமதி ஒப்படைக்கும் வரை கீழே காட்டப்படும் வீத வரிப்பணத்தினை 2016 ஆம் ஆண்டுக்கு தற்காலிகமாக அறவிடப்படுவதற்கும்,

அவ்வரிப்பணம் அப்பிரதேச சபைச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவ் ஆண்டின் மாச்சு மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் மாதம் 30, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிகளில் முடிவுறும் நான்கு தவணைக்குள் சமமான நான்கு தவணைப்பண அடிப்படையில் செலுத்துமாறு கட்டளையிடுவதற்கு மண்முனைபற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

| | ஆதனங்களின் விபரம் | ஆதனம் ஒன்றுக்கான தற்காலிக அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 1. | கல்வீடு | 200 0 |
| 2. | அத்திவாரம் | 50 0 |
| 3. | ஓலைக்குடிசை | 100 0 |
| 4. | முடிக்கப்படாத கட்டிடம் | 100 0 |
| 5. | பழுதடைந்த வீடு | 100 0 |
| 6. | வியாபார ஸ்தலம் | 200 0 |
| 7. | மாடி வீடு | 400 0 |
| 8. | தற்காலிக வீடு | 120 0 |
| 9. | வெற்றுக்காணி | 50 0 |
| 10. | பிலேட் இடப்பட்ட வீடு | 300 0 |
| 11. | சிறுதோட்ட காணி | 50 0 |
| 12. | பயனுள்ள மரங்கள் உள்ள காணி (ஏக்கர்) | 400 0 |
| 13. | தகட்டு குடிசை, சிறிய கல்வீடு | 120 0 |
| 14. | தகரக்கடை | 120 0 |
| 15. | தொலைதொடர்பு கோபுரம் | 400 0 |
| 16. | தொழிற்சாலை | 400 0 |

2-641/2

---

## ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச சபை

சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் விதித்தல் – 2016

மண்முனைப்பற்று பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய மண்முனைப்பற்று பிரதேச சபை செயலாளரின் சபைத் தீர்மான இலக்கம் 155 இன் கீழ் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டிற்கு விதிக்கப்பட்ட அந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணத்தையும், பரிசோதனைக் கட்டணத்தையும் சுற்றாடல் சான்றிதழ் வழங்கும் முன்னர் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும் எனவும் மேலும் அறிவித்துக்கொள்ளப்படுகின்றது.

(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,
செயலாளர்,
மண்முனைப்பற்று பிரதேச சபை.

மண்முனைப்பற்று பிரதேச சபை அலுவலகம்,
ஆரையம்பதி,
2016, சனவரி 25.

### தீர்மானம்

1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தாலும், 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றாடல் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மண்முனை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் தேசிய சுற்றாடல் சட்டத்தில் "இ" நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாயினும் ஒரு தொழிலுக்கு அல்லது வியாபாரத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நபரிடமிருந்து பின்வரும் அட்டவணையில்

குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டணத்தையும், பரிசோதனைக் கட்டணத்தையும் 2016 ஆம் ஆண்டுக்காக விதித்து அறவிட வேண்டும் எனவும் அக்கட்டணத்தினை அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முன்னர் மண்முனைப்பற்று பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என மண்முனைப்பற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| சுற்றாடல் அனுமதிப்பத்திரக்கட்டணம் | 4,000 0 |
| சுற்றாடல் அனுமதிப்பத்திர பரிசோதனைக் கட்டணம்- | |
| 2,50,000 அல்லது அதற்கு மேல் | 3,000 0 |
| 2,50,001 - 5,00,000 | 3,750 0 |
| 5,00,001 - 10,00,000 | 5,000 0 |
| 10,00,000 மேல் | 10,000 0 |

2-642

---

## ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச சபை

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உப பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப் பிரதேச சபை நிருவாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்படும் காணி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் படியும் அதனோடு சேர்த்து வாசிக்கப்படக்கூடிய 57 ஆம் இலக்க 1946 ஆம் ஆண்டின் பொது, தனியார் மயானங்கள் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் விதியின்கீழ் விசேட ஆணையாளருக்கு அளிக்கபபட்டுள்ள அதிகாரத்தின்படி ஜனாப் எம். சி. ஏ. ஹமீட் என்பவரது காணியில் இருந்து 2 றூட், 12.41 பேச் காணி ஜனாப் எம். சி. ஏ. ஹமீட் என்பவரதும், அவரது குடும்பத்தினரதும் மற்றும் அவரை சார்ந்தவர்களதும் இறந்தவர்களின் பூதவுடல்களை நல்லடக்கம் செய்வதற்கு தனியார் மயானத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக மண்முனை பிரதேச சபையின் 2015, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய மண்முனைப் பிரதேச சபை செயலாளரின் சபை தீர்மானம் 156 இன் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,
செயலாளர்,
மண்முனைப்பற்று பிரதேச சபை.

மண்முனைப்பற்று பிரதேச சபை அலுவலகம்,
ஆரையம்பதி,
2016, சனவரி 25.

**அட்டவணை**

மண்முனைப் பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட ஆரையம்பதி கிழக்கு 176 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட டீன் வீதியில் திரு. கே. கமலநாதன் நில அளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்டுள்ள நில அளவை KK/BT/2014/853J இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டதுமான துண்டு - 4 இல் குறிக்கப்படும் தனியார் மயானத்தின் விபரம்.

| | |
|---|---|
| இடம் அமைந்துள்ள மாவட்டம் | : மட்டக்களப்பு |
| இடம் அமைந்துள்ள பிரதேச சபை | : மண்முனை பிரதேச சபை |
| கிராம அலவலர் பிரிவு | : 176 |
| கிராமம் | : ஆரையம்பதி கிழக்கு |
| இடத்தின் பெயர் | : ஏ. எல். எஸ். மாவத்தை (வெறியன் சேனை) |
| எல்லைகள் | : வடக்கு : தனியார் வீதி ; கிழக்கு : டீன் வீதி ; தெற்கு : டீன் வீதி ; மேற்கு : எம்எச்ஏ ஹமீட் காணி. |
| பரப்பளவு | : 2 றூட் 12.41 பேர்ச் |

2-643/1

## ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச சபை

*முச்சக்கர தரிப்பிடக்கட்டணம் – 2016*

*மண்முனைப்பற்று பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய மண்முனைப்பற்று பிரதேச சபை செயலாளரின் தீர்மான இலக்கம் 149 இன் கீழ் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*2016 ஆம் ஆண்டிற்கு விதிக்கப்பட்ட அந்த தரிப்பிடக்கட்டணத்தை அந்த ஆண்டின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென்றும் மேலும் அறியத்தரப்படுகின்றது.*

*(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,*
*செயலாளர்,*
*மண்முனைப்பற்று பிரதேச சபை,*
*ஆரையம்பதி.*

*மண்முனைப்பற்று பிரதேச சபை அலுவலகம்,*
*ஆரையம்பதி,*
*2016, சனவரி 25.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (vii) ஆவது உட்பிரிவின் (ஏ) உப பிரிவின் கீழ் மண்முனைப்பற்று பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள பிரதேச சபைக்கு சொந்தமான பின்வரும் முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கரவண்டிகள் மீது பின்வரும் கட்டணங்களை மண்முனை பிரதேச சபை அறவிடுவது எனவும் இக் கட்டணத்தினை 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி சபை அனுமதியினை பெறுதல் வேண்டும் எனவும் மண்முனைப்பற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*1. நிரந்தரமாக தரிப்பிடத்தினை பயன்படுத்தும் முச்சக்கரவண்டி ஒன்றுக்கு வருடத்துக்கு 1,000 ரூபா*

1. ஆரையம்பதி எல்லை வீதி முச்சக்கர வண்டி தரிப்பிடம்.
2. ஆரையம்பதி வைத்தியசாலை முச்சக்கர வண்டி தரிப்பிடம்.
3. ஆரையம்பதி பொதுச்சந்தை முச்சக்கர வண்டி தரிப்பிடம்.
4. ஆரையம்பதி சிவன் கோயிலடி முச்சக்கர வண்டி தரிப்பிடம்.
5. ஆரையம்பதி மக்கள் வங்கியடி முச்சக்கர வண்டி தரிப்பிடம்.
6. ஆரையம்பதி நான்காம் கட்டை முச்சக்கர வண்டி தரிப்பிடம்.
7. ஆரையம்பதி ஐந்தாம் கட்டை முச்சக்கர வண்டி தரிப்பிடம்.

*2-643/2*

---

## ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச சபை

*காணி விற்பனை செய்வதன் மீதான வரி விதித்தல் – 2016*

*மண்முனைப்பற்று பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய மண்முனைப்பற்று பிரதேச சபை செயலாளரின் தீர்மான இலக்கம் 148 இன் கீழ் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,*
*செயலாளர்,*
*மண்முனைப்பற்று பிரதேச சபை.*

*மண்முனைப்பற்று பிரதேச சபை அலுவலகம்,*
*ஆரையம்பதி,*
*2016, சனவரி 16.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154 (1) ஆவது உட்பிரிவின் கீழ் மண்முனைப்பற்று பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள ஏதும் ஒரு காணியை 2016 ஆம் ஆண்டு ஏலதாரர் ஒருவரோ, தரகு முகவரோ அவரது அலுவலரோ அல்லது அவரது பிரதி நிதியோ ஏல விற்பனை மூலமாக அல்லது வேறேதும் முறையில் விற்பனை செய்யும் தருணத்தில் அக்காணியை விற்று வரவுத் தொகையில் இருந்து ஒரு சத வீதத்துக்கு சமமான வரியொன்றினை மண்முனைப்பற்று பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டும் எனவும் மண்முனைப்பற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*2-644*

---

### ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச சபை

*அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரி விதித்தல் - 2016*

*மண்முனைப்பற்று பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய மண்முனைப்பற்று பிரதேச சபை செயலாளரின் சபைத் தீர்மான இலக்கம் 147 இன் கீழ் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*2016 ஆம் ஆண்டிற்கு விதிக்கப்பட்டுள்ள அந்த அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரி அந்த ஆண்டின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதும் மேலும் அறியத்தரப்படுகின்றது.*

*(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,*
*செயலாளர்,*
*மண்முனைப்பற்று பிரதேச சபை.*

*மண்முனைப்பற்று பிரதேச சபை அலுவலகம்,*
*ஆரையம்பதி,*
*2016, சனவரி 25.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 (1) ஆவது உட்பிரிவிற்கமைய பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய மண்முனைப்பற்று பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் அமைந்துள்ள கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு அல்லது நிலையாக அன்றாடம் விவசாயம் செய்வதற்கு பொருத்தமான பட்சத்தில் அல்லது நியாயமான செலவினத்துடன் அந்த காணியை குறித்த ஏதும் பணிக்கு அபிவிருத்தி செய்யக்கூடியதாக உள்ள பட்சத்தில், அவ்வாறான ஏதேனுமொரு காணியில்-*

- *(அ) கட்டடம் ஏதும் நிர்மாணிக்கப்படவில்லையாயின், அல்லது*
- *(ஆ) அந்த காணி முறையாக அல்லது நிரந்தரமாக விவசாயம் செய்வதற்கு பயன்படுத்தப்படாத பட்சத்தில் அல்லது*
- *(இ) சுற்று வேலிகளிடப்படாது தொற்றுநோய்கள் பரவக்கூடிய வகையில் பற்றைக்காடுகளாக காணப்படுகின்ற பட்சத்தில், அல்லது*
- *(ஈ) அந்த காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு உண்மையில் பயன்படுத்தப்பட்டுள்ள நிலத்தின் அளவு மற்றும் அக்காணியின் மொத்த நில அளவுக்குமிடையிலுள்ள விகிதம் மூன்றிற்கு இரண்டு (3 க்கு 2) க்கு குறைவாக இருப்பின்,*

*குறித்த காணியை அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருதுவதற்கும் மற்றும் அவ்வாறு அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருதப்படுகின்ற காணிகள் மீது 2016 ஆம் ஆண்டிற்கு அந்த ஒவ்வொரு காணியின் நிலத்தின் மூலதன பெறுமதியில் நூற்றுக்கு இரண்டு வீதம் (2%) ஆன வருடாந்த வரியை விதிப்பதற்கும் குறித்த அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரியை 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் மண்முனைப்பற்று பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்றும் மண்முனைப்பற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*2-645/1*

**ஆரையம்பதி மண்முனைப்பற்று பிரதேச சபை**

*வாகனம் மற்றும் விலங்கு தொடர்பான வரி விதித்தல் – 2016*

*மண்முனைப்பற்று பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய மண்முனைப் பிரதேச சபை செயலாளரின் தீர்மான இலக்கம் 146 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*அதற்கமைய மண்முனைப்பற்று பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் இந்த வரிக்கு உட்படும் யாதாயினும் ஒரு வாகனம் அல்லது விலங்கை வைத்திருக்கும் ஒவ்வொரு ஆளும் குறித்த வாகனம் அல்லது விலங்கை தமது பொறுப்பில் வைத்திருக்கும் நாட்களின் எண்ணிக்கை 30 நாட்களாக பூர்த்தியடைந்தவுடன் 2016 ஆம் ஆண்டிற்கான இந்த வரியை மண்முனைப்பற்று பிரதேச சபைக்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதும் மேலும் அறியத்தரப்படுகின்றது.*

*(திருமதி) சீ. ஜே. அருள்பிரகாசம்,*
*செயலாளர்,*
*மண்முனைப்பற்று பிரதேச சபை.*

*மண்முனைப்பற்று பிரதேச சபை அலுவலகம்,*
*ஆரையம்பதி,*
*2016, சனவரி 25.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 148 ஆவது பிரிவின் மற்றும் 4 ஆவது அட்டவணையின் ஏற்பாடுகளின் மூலம் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய மண்முனை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் 2016 ஆம் ஆண்டில் கீழே அட்டவணையில் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு வாகனம் அல்லது விலங்கை வைத்திருக்கும் ஆளொருவரிடமிருந்து அதன் II ஆவது நிரலில் இசைவான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வரியை 2016 ஆம் ஆண்டிற்கு விதித்து அறவிட்டுக்கொள்ள மண்முனைப்பற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II<br>ரூபா ச. |
|---|---|
| மோட்டார் வாகனம், முச்சக்கர வண்டி, மோட்டார் லொறி, மோட்டார் சைக்கிள் தள்ளு வண்டி, மாட்டு வண்டி, ஜின் ரிக்ஷோ, துவிச்சக்கர வண்டி மற்றும் அல்லது ரைசிக்கிள் அல்லாத அனைத்து வாகனங்களுக்கும், | 25 0 |
| ஒவ்வொரு சைக்கிள் அல்லது ட்ரைசிக்கல் அல்லது சைக்கிள் கார் அல்லது பைசிக்கிள் வண்டிலுக்கு | |
| (அ) வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படின் | 18 0 |
| (ஆ) வர்த்தக நோக்கம் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படின் | 4 0 |
| ஒவ்வொரு மாட்டு வண்டிலுக்கும் | 20 0 |
| ஒவ்வொரு கைவண்டிக்கும் | 10 0 |
| ஒவ்வொரு யானைக்கும் | 50 0 |

